சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS 160/2020

23.06.2025

**வா.சா.1 ஜீவானந்தம் த/பெ. திருஞானம் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் ( நீதிமன்ற காப்பாளர் ) குறுக்கு விசாரணை:-**

2, 3 பிரதிவாதிகளின் தகப்பனார் இறந்த மோகன் மருத்துவர் என்றால் சரிதான். அவர் மன்னார்குடியில் பிரசித்தி பெற்ற மருத்துவர் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள நிரூபணபிரமாணபத்திரத்தில் தாவா சொத்தில் இருந்த பழைய வீடு இடிக்கப்பட்டு இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அது எந்த வருடம் எந்த மாதம் இடிக்கப்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் 40 லட்சம் மதிப்பில் தரைதளமும் முதல் தளமும் கட்டப்பட்டது என்று சொல்லியுள்ளேன் அது யாருடைய செலவில் கட்டப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் MA. B.Ed படித்துள்ளேன். கணேசன் என் தம்பி பொறியியல் படித்துள்ளார் என் சகோதரி கலைசெல்வி B.com படித்துள்ளார். நாங்கள் அனைவரும் திருமணமான முதல் தனித்தனியாக தான் இருக்கிறோம் என்றால் இல்லை கூட்டு குடும்பமாக தான் இருக்கிறோம். நாங்கள் அனைவரும் ஒன்றாக ஒரே குடும்பமாக வசிப்பதை காட்டுவதற்கு குடும்ப அட்டையில் அனைவரது பெயரும் இருக்கிறது என்று குடும்ப அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் கூட்டுகுடும்பமாக இல்லை என்றாலும் வழக்கிற்காக கூட்டுகுடும்பமாக வசிப்பதாக சொல்கிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்து யார் பெயரில் இருந்தது என்றால் என் அம்மா சரோஜா பெயரில் இருந்தது. என் அம்மா 11.11.2012 ல் இறந்தார். மாடி வீடு கட்டி கிரகபிரவேசம் முடிந்தபின்பு தான் இறந்தார். எங்கள் குடும்பத்தில் அதிக வருமானம் ஈட்டியது டாக்டர் மோகன் தான் என்றால் சரிதான். பொதுவாக மனைவிக்கு கணவர் வாரிசாக வரமாட்டார் என்றால் அதுபற்றி தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ. 1 ஆவணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதற்கு சார்பதிவாளர் என்ன எழுதிக்கொடுக்கிறீர்கள் என்ற கேட்டுதான் பதிவு செய்தார் என்றால் சரிதான். சார்பதிவாளர் என்னிடம் ரூ. 75,000/- பெற்றுக்கொண்டிற்காளா என்று கேட்டார்களா என்றால் இல்லை. அதேபோல் என் தம்பியிடம் பத்தரத்தின் வாசகத்தை கண்டு ஏன் இப்படி எழுதியுள்ளது என்று கேட்டேனா என்றால் இல்லை. ஆவணம் பதிவு செய்யபின்பு ரூ. 75,000/- பணம் பெற்றுக்கொண்டதாக உள்ளது என்பது தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்போ அல்லது சட்ட நடவடிக்கையோ எடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வாரிசு சான்றிதழில் என் தகப்பனார் பெயர் இடம்பெறவில்லை என்றால் சரிதான். அந்த வாரிசு சான்று நகலை என் தகப்பனார் தான் பெற்றார் என்றால் சரிதான். வாரிசு சான்றில் என் தகப்பனார் பெயர் விடுபட்டுள்ளது என்பதற்கு இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகாவது ஏதேனும் நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 1 ல் வீடு உள்ளது போல் எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வீடு 2011 ல் கட்டப்பட்டது தொடர்பாக அனுமதி கடிதமோ அல்லது வரைபடமோ அல்லது வேறு ஏதேனும் ஆவணமோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் 2013 – 2014 ம்

ஆண்டு காலத்தில் ஏற்பட்ட ஆவணம் என்றால் சரிதான். என்னிடம் காட்டடும் வா.சா.ஆ 15 மற்றும் வா.சா.ஆ.16 சேந்தமங்கலம் முகவரிக்கு உரிய குடிநீர் கட்டண ரசீது என்றால் சரிதான். அதில் என் தாயார் பெயர் இல்லை என்றால் சரிதான். என் பெயரிலும் என் அப்பா பெயரிலும் உள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன 2 ஆவணங்களும் வழக்கு சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. வழக்கு சொத்துகள் வீடு அனைத்தும் என் சகோதரன் மோகன் சொந்தபணத்தை கொண்டு கட்டபப்பட்டது என்றால் சரியல்ல. அனைவரும் சேர்ந்து கட்டினோம். அனைவரும் சேர்ந்து கட்டினோம் என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சொத்தின் எல்லா உரிமையையும் விட்டுக்கொடுத்துவிட்டு அதற்கான பணத்தையும் பெற்றுக்கொண்டு தற்போது பொய்யாக இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகள் அனைத்தும் 2, 3 இளவர் பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் அந்த சொத்துகளை அவர்கள் இளவராக இருப்பதை பயன்படுத்திக்கொண்டு அபகரிக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய வழக்குரையிலும் நிரூபணபிரமாணபத்திரத்திலும் கற்பனையான சம்பவங்களை கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்பதால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல. 2, 3 வாதிகளில் முகவரியை காட்டகூடிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் எந்த காலத்திலும் வழக்கு சொத்தில் வசிக்கவில்லை என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல என் அம்மாவின் வாரிசு சான்றிதழில் என் அப்பா ஒரு வாரிசாக வரமாட்டார் என்று தெரிந்து தான் என்அப்பாவும் அவர் பெயரை வாரிசு சான்றில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக என் அப்பாவிற்கும் சொத்து உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

சார்பு நீதிபதி,

மன்னார்குடி